Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 233/2023

Deposition of witness for Prosecution P.W. 1 Date : 29.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | பூங்கொடி | Village : | பரமசிவன்பாளையம் |
| Husband's Name : | பூபதிராஜ் | Taluk : | பல்லடம் |
| Age : | 50 | District: | திருப்பூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of August 2025 **(Accused Present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது பல்லடத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்துவருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன காளியம்மாள் என் அக்கா. அந்த விபத்தில் மற்றொரு நபரும் இறந்துவிட்டார். விபத்து நடந்த அன்று நான் அங்குதான் இருந்தேன், விபத்தினை பார்த்தேன். அன்றையதினம் நான் குரும்பபாளையத்திலுள்ள என் அக்கா வீட்டில் இருந்தேன். அன்றைய தினம் இரவு சுமார் 09.30 மணிக்கு சாலை விபத்தை நேரில் பார்த்த நபர்கள் எனக்கு போன் செய்து குரும்பபாளையம் கோவிலுக்கு எதிரே கார் மோதி என் அக்காவிற்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். உடனே நான் சம்பவ இடம் சென்றேன். பின்னர் என் அக்காவை குமரன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். என் அக்கா சுமார் 12 நாட்கள் சிகிச்சைக்கு பின் இறந்துவிட்டார். என் அக்காவோடு வந்த கவிதா என்பவர் விபத்துக்கு மறுநாளே இறந்துவிட்டார். என் அக்காவும் மேற்படி கவிதாவும் சாலையின் ஓரத்தில் நடந்து சென்ற போது விபத்து ஏற்பட்டிருந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என் அக்கா மீது மோதிய காரின் ஓட்டுநர் ஒரு பெண். இன்று அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார். (சாட்சி எதிரியை சுட்டிக்காட்டி அடையாளம் கூறுகிறார்.) இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை விபத்தினை பார்த்தவர்கள் சொல்லி தெரிந்துகொண்டதை நான் கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்த போது விபத்து நடந்த அன்று நான் என் அக்கா வீட்டில் இருந்ததாக தான் சொன்னேன். என் அக்காவின் வீடு விபத்து நடந்த இடத்தில் இருந்து சுமார் 1/4 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சக்தி– கோவை தென்வடல் மெயின் ரோட்டில் மேல்புறமாக என் அக்காவின் வீடு உள்ளது. விபத்து நடந்த அன்று எங்கள் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டு என் அக்கா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு சென்றாரா என்றால் இல்லை.

ரோட்டின் மேல் புறமாக விபத்து நடந்ததாக எனக்கு தெரிவித்தார்கள். அதைத்தான் நான் போலீசாரிடமும் சொல்லி இருந்தேன். போலீசார் என்னை 22 ஆம் தேதி விசாரித்தார்கள், பின்னர் மருத்துவமனையில் வைக்கும் விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கு நான் சுமார் அரை மணி நேரம் கழித்து சென்றிருப்பேன். விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்பதால் யாருடைய கவன குறைவினால் இந்த விபத்தை ஏற்பட்டது என்று என்னால் நேரடியாக சொல்ல முடியாது என்றால் தவறு, சம்பவ இடத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.